மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் நகரப் பேருந்து 21–10–81 முதல் விடப்பட்டுள்ளது.

திரு.எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை அந்தப் பகுதியிலே விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே விடப்பட்டிருக்கிறபேருந்துகள் 10 கிலோ மீட்டருக்குள்ளாக தான் சென்று வருகின்றன. ஆகவே அரசு அனுமதித்திருக்கிற 30 கிலோமீட்டருக்கு அவைகளை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தேவையானால், அரசு ஏற்பாடு செய்யும்.

மினி பஸ்களுக்கு வரிச்சலுகை அளிக்கும் திட்டம்.

*வினா எண் 257—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பஸ்களுக்கு (Mini Buses) வரிச்சலுகை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தச் சலுகை எப்போது முதல் நடைமுறைப்படுததப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சிறு உந்துகளுக்கு ஏற்கனவே வரிச்சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மினி பஸ்களை இயக்குவதற்கு, உரிமம் கேட்டு தனியார்களிடம் இருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்தால் அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 69 மினி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதிலே அரசாங்கத்திற்குச் சொந்தமானவை 49, மீதி 20 வண்டிகள் தனியார்களுக்குச் சொந்தமானவைதாம். தேவையான நேரத்தில் பேருந்துகள் விடவேண்டும் இந்த இடத்தில் என்று சொல்லி அரசு முயற்சி எடுக்கிறபோதுதான் தனியார்கள் அதற்கான மனுக்களைக் கொடுக்க முடியும். அவர்களாகவே கொடுக்க முடியாது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கிராமப்பகுதிகளை இணைப்பதுதான் இந்த மினி பஸ்களை விடுகின்ற நோக்கம். ஆனால் பேருந்துகளுக்கு உரிய கட்டணம் தான் இந்த மினி பஸ்களுக்கும் வசூலிக்கபபடுகிறது. ஆகவே, அந்தக் கட்டண அளவை நகர்ப்பேருந்துகளுக்கு வசூலிக்கப்படுவதுபோன்று குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய உள்ளடங்கியிருக்கும் கிராமங்களுக்கும் பேருந்துகள் வசதி வேண்டும் என்றுதான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அத்தகைய இடங்களில் 100-லிருந்து 50 வீடுகள் தான் இருக்கின்றன. அதிலே பயணம் வரக்கூடியவர்கள் மிகவும் குறைவாக இருப்பார்கள். ஏற்கெனவே இந்த மினி பஸ்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கட்டணத்தையும் குறைத்தால், அதை நடைமுறைப்படுத்துவதே வெற்றி பெறாமல் போய்விடக்கூடும்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனை பொருள் தொழிற்கூட மையம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 258—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. அவசியம் ஏற்பட்டால், ஆராய்ந்து அதற்கான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் விடைகளின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10.00.)

திரு. இரா. தாமரைக்கனி: திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் இருப்பதால் அங்கே பனை கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: அதற்கானவாய்ப்புக் கூறுகள் இருக்குமானால் அதை ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: வேலையில்லாமல் சும்மா இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே, ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை நீ என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) திருவில்லிபுத்தூரில் ஆரம்பிக்கும் அந்தக் கூடத்தில் என்னென்ன பொருள்கள் தயாரிக்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: ஒன்றுக்கும் உதவாது இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே என்று சொல்வதாகச் சொன்னார்கள்.